**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள், 23.8.2007 அன்று சென்னையில் நடைபெற்ற தகவல் தொழில் நுட்பத் தொழில்களுக்கான பணிமுனைப்புக் குழுவின் முதல் கூட்டத்தில் ஆற்றிய ஆங்கில உரையின் தமிழ் வடிவம் :**

1997 ஆம் ஆண்டில், திராவிட முன்னேற்றக் கழக அரசு தமிழகத்தில் நடைபெற்றபோது ஒருங்கிணைந்த தகவல் தொழில் நுட்பக் கொள்கையை உருவாக்கிய முதல் மாநிலம் இந்தியாவில் தமிழகமே என்ற பெருமையைப் பெற்றது. அதே ஆண்டில், தமிழகத்தில் தகவல் தொழில்நுட்பத் தொழில்களுக்கான "மாநில அளவிலான பணி முனைப்புக் குழு" அமைக்கப்பட்டது. தகவல்தொழில் நுட்பத்துறையில் 1996–2001 காலகட்டத்தில் பல முன்னோடியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டன. 1999 ஆம் ஆண்டில் "தமிழ்நெட் 99" என்னும் பெயரில், கணினியில் தமிழைப் பயன்படுத்துதல் குறித்த பன்னாட்டு மாநாடு நடத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து, யுனிகோட் கண்சோர்டியத்தில் தமிழகமும் ஒரு முழுமையான உறுப்பினராக இணைந்தது; தமிழ் மென்பொருள் வளர்ச்சி நிதி ஒன்று ஏற்படுத்தப்பட்டது; சென்னை, மதுரை, திருச்சி, திருநெல்வேலி ஆகிய இடங்களில் செயற்கைக்கோள் தரை நிலையங்கள் அமைத்திட இந்திய மென்பொருள் தொழில் நுட்பப் பூங்காவிற்கு (STPI) தமிழ்நாடு அரசு வட்டியில்லாக் கடன்களை வழங்கியது. எணினிப் (Digital) புரட்சியினால் நகர்ப்புறம் மற்றும் கிராமப்புற மக்களிடையே ஏற்பட்டுள்ள இடைவெளியை இணைத்திடும் பாலமாக "கிராமப்புற இந்தியாவைப் பேணுவதற்கான நுழைவு" (Sustainable Access to Rural India) எனப்படும் சிறந்த திட்டம் அக்கால கட்டத்தில் தொடங்கப்பட்டது. தமிழ் இணையப் பல்கலைக் கழகம் ஏற்படுத்தப்பட்டது; வழித்தட உரிமைக் கொள்கை (Right of

Way Policy) உருவாக்கப்பட்டது; துணிகர முயற்சிக்கான முதலீட்டு நிதி (Venture Capital Fund) நிறுவப்பட்டது; 1200 மேல்நிலைப் பள்ளிகளில் கணினிக் கல்வி அறிமுகப்படுத்தப்பட்டது. இத்தகைய பல பணிகள் அப்பொழுது மேற்கொள்ளப்பட்டன. அந்நாளில் ஆற்றிய பணிகளுக்கெல்லாம் மணிமுடிச் சாதனையாக –முத்தாய்ப்பாகச் சென்னையில் "டைடல் பூங்கா"வும், சிறுசேரியில் தகவல் தொழில் நுட்பப் பூங்காவும் அமைக்கப்பட்டன. எனவே, 1996 முதல் 2001 வரையிலான காலத்தில் அப்போதைய தமிழக அப்போதைய அரசுதான் இன்று தமிழகத்தில் தகவல் தொழில் நுட்பத்துறையில் ஏற்பட்டுள்ள புரட்சிக்கு வித்திட்டது எனக் கூறினால் அது மிகையாகாது.

ஐந்தாவது முறையாக, நான் தமிழக முதலமைச்சராகப் பொறுப்பேற்றவுடன் பெங்களூருக்கு நானே நேரடியாகச் சென்று அங்குள்ள பல தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களைப் பார்வையிட்டேன்; வன்பொருள் மற்றும் மென்பொருள் தொழில் நிறுவனங்களின் தலைவர்களுடன் விரிவாக விவாதித்தேன். அதன்மூலம் தமிழக அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் காரணமாக மென்பொருள் ஏற்றுமதியில் தமிழகம் முன்னிலை பெற்றிருப்பது அறிந்து பெருமிதம் கொண்டேன்.

2006–2007 நிதியாண்டில் தமிழகத்தில் மேற்கொள்ளப்பட்ட மென்பொருள் ஏற்றுமதியின் மதிப்பு 20 ஆயிரம் கோடிக்கும் அதிகம் என்ற மகிழ்ச்சியான செய்தியை உங்களுடன் பகிர்ந்து கொள்வதில் உவகை அடைகிறேன். "இன்போஷிஸ்", "டிசிஎஸ்", "விப்ரோ", "காக்னிசண்ட்", "சத்யம்", "எச்சிஎல்" ஆகிய நிறுவனங்கள் பெரிய அளவிலான தகவல் தொழில் நுட்ப வளாகங்களைத் தமிழகத்தில் அமைக்கின்றன. ஐபிஎம் நிறுவனம் சென்னையில் அதன் உலக விநியோக மையத்தை ஏற்படுத்த இருப்பதாக அண்மையில் அறிவித்துள்ளது. தகவல் தொழில் நுட்பம், தகவல் தொழில் நுட்பம் சார்ந்த பணிகளுக்கான சிறப்புத்

தொழில் மையங்கள் பல நிறுவனங்கள் தமிழகத்தில் அமைக்கப்படுகின்றன. இவை தவிர, 61 மில்லியன் சதுர அடிப்பரப்பில் தமிழகத்தில் தகவல் தொழில் நுட்பத் தொழில் பிரிவுகள் உருவாக்கப்படுவதற்குத் தடையின்மைச் சான்றுகள் வழங்கப்பட்டுள்ளன. இவை காரணமாகத் தகவல் தொழில் நுட்ப மென்பொருள் தொழில்களின் வளர்ச்சிக்கான வாய்ப்புகள் வரும் சில ஆண்டுகளில் மேலும் பெருகிப் புகழ் சேர்க்கும், உங்கள் அனைவரின் அயராது ஒத்துழைப்புகளின் பயனாக இத்துறையில் தமிழகம் உலகில் தலைமை ஏற்கும் என்பதில் எனக்கு எள்ளளவும் அய்யமில்லை.

தகவல் தொழில் நுட்பப் புரட்சியின் பயன்கள் சென்னையிலும், அதன் புற நகர்ப் பகுதிகளிலும் மட்டுமே அமைதல் கூடாது என நான் உணர்ந்துள்ளேன். மாநிலத்தின் பிற பகுதிகளுக்கும் இத்திட்டத்தின் பயன்கள் பரவுதல் வேண்டும். எனவே, கோவை, மதுரை, சேலம், திருச்சி, நெல்லை ஆகிய நகரங்களிலும் தகவல் தொழில் நுட்பத் தொழில்களுக்கான தொழில் மையங்களை அரசு நிறுவுகிறது. இந்த இடங்கள் அனைத்திலும் உள்ள மனித வளங்களும், போக்குவரத்து இணைப்பு வசதிகளும், எந்த வகையிலும் சென்னைக்குக் குறைந்தவை அல்ல என்பதை நீங்கள் காணமுடியும். உண்மையில், இந்த இடங்களைத் தேர்வு செய்வதன் மூலம் கிடைக்கும் பயன்கள் கணிசமானவையாகும். அரசு இந்த இடங்கள் அனைத்திலும் உரிய கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதில் சிறப்புக் கவனம் செலுத்தி வருகிறது. இந்த முனைப்பான முயற்சிகளுக்கு உங்கள் அனைவரது ஆதரவையும் கோருகிறேன்.

மின்னணு வன்பொருள் உற்பத்தியில் உலக நாடுகளின் இணைப்பு மையமாகத் தமிழகம் எழுச்சி பெற்று வருகிறது. உலகின் மிகப் பெரிய வன்பொருள் உற்பத்தியாளர்களில் மோட்டோரோலா, நோக்கியா, ஃபிளெக்ஸ்ரானிக்ஸ், டெல் கம்ப்யூட்டர்ஸ், சாம்சங், சான்மினா ஆகிய

நிறுவனத்தினர் தமிழகத்தில் தங்கள் தொழிற்சாலைகளை அமைத்து வருகின்றனர். இப்பிரிவில் மேலும் பல தொழில்முனைவோர் தங்கள் தொழிற் சாலைகளைத் தமிழகத்தில் தொடங்கிட ஆர்வம் கொண்டு தமிழக அரசுடன் தொடர்புகொண்டு வருகின்றனர்; அவர்களும் தங்கள் தொழில் திட்டங்களை விரைவில் அறிவிப்பார்கள். வன்பொருள், மென்பொருள் ஆகிய இரண்டின் உற்பத்திகளில் இந்தியாவின் மற்ற எந்த ஒரு மாநிலமும் இணையாக முடியாத அளவுக்குத் தமிழகம் சிறந்து விளங்குகிறது.

இந்தச் சிறப்பான சாதனையை நிலைநிறுத்துவதற்காகவும், தகவல் தொடர்பு தொழில் நுட்பத் துறையில் மேலும் முன்னேற்றம் அடைந்திடவேண்டும் என்பதற்காகவும் ஆலோசனைகளைப் பெறுவதற்காக உங்கள் அனைவரையும் இன்று அழைத்துள்ளோம். இது தொடர்பாக எங்கள் அரசு தொடர்ந்து மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகள் குறித்து உங்களுடைய கருத்துரைகளை வழங்கிட வேண்டுகிறேன். தகவல் தொடர்பு தொழில் நுட்பத்துறை கொள்கைகளை வகுப்பதில் உங்கள் கருத்துரைகள் மதிப்பு வாய்ந்தவையாக அமையும்.

நாம் அனைவரும் இணைந்து தகவல் தொழில் நுட்பத் தொழில்துறையில் தமிழகத்தை உலகின் தலைமையகமாக உருவாக்கிடுவோம்! தமிழக மக்கள் மகிழ, அவர்கள் வாழ்வில் வளம் குவிப்போம்!

*********